சில பர்ஸென்டேஜ்தான் செய்கிறார்கள். அப்படியிருக்கும்போது டெபுடி இன்ஸ்பெக்டர் பதவிக்குப் போலீஸ துறையில் 40 சத விகிதம் டைரக்ட் ரெக்ரூட்மெண்டுக்கும், 60 சதவிகிதம் டிபார்ட்மென்ட்டில் உள்ளவர்களுக்கும் என்று ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நேரடி நியமனம் பாவகரமான செயல் அல்ல. அப்படி அது பாவகரமான செயல் என்றால் திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தபோதுகூட அந்தப் பாவம் நிறைய நடைபெற்றிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: இப்போது ஒவ்வொரு சரகத்திலும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். தனிப்பட்டு இன்டிப்பென்டன்டாக டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்படும்போது இவர்களுடைய ஜூரிஸ்டிக்ஷன் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது இருக்கும் இன்ஸ்பெக்டர்கள் கிரைமையும் சேர்த்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்ட பிறகு கிரைம் பிரிவு பிரிக்கப்பட்டு இவர்களிடத்தில் இயங்கும்.

Post of Gazetted teachers in Education Department

* 448. *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of posts of Gazetted Teachers in the Education Department (excluding 'B' Section): and

(*b*) the number of posts of Gazetted teachers in the Education Department in the Kanyakumari district ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 76.

(இ) 16.

திரு. ஏ. சுவாமிதாஸ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு பாடசாலைகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய அளவுக்கு அரசு கெஜடெட் ராங்க் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்களே, அப்படிப்பட்டவர்களுக்கு உடனடியாக கெஜடெட் ராங்க் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவர்களுடைய கோரிக்கைகளை முறைப்படி எழுதி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைப்பார்களேயானால் பரிசீலிக்கப்படும்.

1973 மார்ச் 21]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இதிலே 'ஏ' விங் சம்பந்தமாக விகிதாசாரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த விகிதாசாரப்படி உடனடியாக நியமனம் செய்வதற்கு இலாகாவில் இருந்து நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1970-ல் 38 இடங்கள் மூன்று பயிற்சிக் கல்லூரிகள் உட்பட. 1971-ல் 25 இடங்கள். இதிலே ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட பள்ளிகள் என்று வகுத்து அந்த வகையில் 15 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அப்படித் தேர்ந்தெடுத்து அந்தத் தலைமை ஆசிரியர்கள் அரசிதழ் பதிவுபெற்றவர்களாக ஆக்கப்படுகின்றார்கள். இதிலே குறைபாடு இருக்கிறது என்றோ, விடப்பட்டிருக்கிறது என்றோ கருதுவார்களானால் அது பற்றி விண்ணப்பித்துக் கொள்வார்களானால் முறைப்படி பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் அவ்வளவு பேரையும் அரசிதழ் பதிவுபெற்றவர்களாக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு இப்போது இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : அரசிதழ் பதிவுபெற்ற ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க அரசு என்ன தகுதிகளை வைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் பணிபுரிகிறவர்களை அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்களாக நியமிக்கின்ற செயற்குறிப்பு இருக்கிறது. அந்த வகையில் 76 தலைமையாசிரியர்கள் அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : ஆயிரம் மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளிகளில் உள்ளவர்கள் அந்தத் தகுதியுள்ளவர்கள் என்று கூறினார்கள். அது ஆசிரியர்களுடைய தகுதியைக் குறிப்பதாக இல்லை. ஆசிரியரின் தகுதியை அரசு எப்படி மதிப்பிடுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைமையாசிரியர்களில் பணி மூப்புடையவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுகின்றார்கள்.

New School for Thuraiyur

* 449 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have any proposal to start a new school at Thuraiyur village in Thuraiyur taluk of Tiruchirappalli district ; and

(*b*) if so, the details thereof ?